ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2032/30 - 2017 අගෝස්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.08.17
*2032/30 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாணத்தின் மாகாண சபை

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவிற்கான நியதிச்சட்டத்தை அனுமதித்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2017.07.27 ஆந் திகதி சம்மதிக்கப்பட்டு, 2017.08.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரக்கூடிய வகையில் 2017.08.09 ஆந் திகதி ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,
செயலாளர்,
ஊவா மாகாணத்தின் மாகாண சபை.

ஊவா மாகாண சபை செயலாளர் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2017, ஓகத்து 10.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவிற்கான நியதிச்சட்டம்**

*முன்னுரை.*

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் சபைச் செயலாளர் அலுவலர் குழுவின் மறுசீரமைப்பிற்காகவும் அதற்கான ஆட்சேர்ப்பு, அவர்களுடைய சேவை மற்றும் உள்ளக நிர்வாக நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் (செயலாளர் அலுவலர் குழு) நியதிச் சட்டத்தை இரத்துச்செய்வதற்காகவும் அத்துடன் தொடர்புடைய அதற்கு நிகரான அனைத்து விடயங்களையும் ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

*சுருக்கப் பெயரும் நடைமுறைப்படுத்தப் படும் திகதியும்.*

1. இந்நியதிச் சட்டம் ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாண சபையின், சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவிற்கான நியதிச்சட்டமென குறிப்பிடப்படுவதுடன் ஊவா மாகாண ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் வரை நடைமுறைப்படுத்தப்படும்.

2. இதன் பின்னர் “செயலாளர் அலுவலகம்” எனக் குறிப்பிடப்படுகின்ற நிச்சயிக்கப்படும் வளாகம் ஒன்றில் மாகாண சபைச் செயலாளர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

3. மாகாண சபைச் செயலாளர் அலுவலகத்தில் செயலாளர் ஒருவர் இருப்பார்.

*சபைச் செயலாளர்.*

(i) செயலாளர் அவர்கள் ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்படுவதுடன், இங்கு துணைப் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ், நன்னடத்தையுடன் உள்ளவரை பதவி வகிக்க முடியும்.

(ii) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பதவி வகிக்கின்ற, இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரமுடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை செயலாளராக மேல் (i) ஆம் துணைப்பந்தியின்கீழ் நியமனம் செய்தல் வேண்டும்.

(iii) செயலாளர் பதவியானது ஓய்வூதியத்துடனான ஒன்றாகும். ஓய்வுபெறுதல் அல்லது ஓய்வூதியச் சட்டக்கோவை மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய கட்டளைச் சட்டம் ஆகியன செயலாளர் பதவிக்கும் உரித்துடையதாகும்.

(iv) செயலாளருடைய பதவிக்கும், தரத்திற்கும் ஏற்ற சம்பளம், கொடுப்பனவுகள் சிறப்புரிமைகள் உரித்தாவதுடன், அதைத் தவிர இங்கு 10(ii) ஆம் உப சரத்தின்கீழ், சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவையும் செலுத்திடல் வேண்டும். அதுவானது மாகாண சபை நிதியத்தின் செலவாகும்.

(v) செயலாளராக பதவி வகிக்கும் காலத்திற்குள், செயலாளர் அவர்களுடைய சம்பளத்தை அல்லது செயலாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளைக் குறைத்தல் தகாது.

(vi) செயலாளர்,

(அ) மரணித்தல் அல்லது

(ஆ) ஆளுநர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும் இராஜினாமா பெறும் கடிதமொன்றை ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டதன் பின்னர் அல்லது,

(இ) இலங்கை நிர்வாக சேவையில் வேறொரு பதவிக்கு தனது விருப்பத்தின் மீது இடமாற்றம் பெறுதல் அல்லது,

(ஈ) ஐம்பத்தைந்து (55) வயது பூர்த்தியாகும்போது அல்லது அதற்குப் பின்னர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அல்லது அறுபது (60) வயது பூர்த்தியாவதன் காரணமாக ஓய்வுபெறுதல் அல்லது,

(உ) நோய்வாய்ப்படுதல் காரணமாக அல்லது உடல் மற்றும் உள ரீதியிலான பின்னடைவுகள் காரணமாக அல்லது ஏதேனும் ஒழுக்காற்றுத் தீர்மானங்கள் மீது பதவியிலிருந்து நீக்கப்படுதல் அல்லது,

(ஊ) ஏதேனுமொரு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்மானமொன்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட சிறைத் தண்டனையினால் செயலாளர் பதவியில் வெற்றிடம் ஏற்படும். இதைத் தவிர வேறு எக்காரணம் மீதும் செயலாளர் பதவியில் வெற்றிடம் ஏற்படமாட்டாது.

(vii) நோய்வாய்ப்பட்டமையால், அல்லது வேறு பின்னடைவுகள் காரணமாக அல்லது, இலங்கையை விட்டு வெளியேறுதல் போன்ற காரணங்களால் தனது பதவியில் தற்காலிகமாக கடமையாற்றுவதற்கு செயலாளர் அவர்களுக்கு முடியாத சந்தர்ப்பத்தில், மேல் 3(i) துணை உப சரத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், செயலாளர் அவர்கள் சார்பில் கடமையாற்றுவதற்காக ஆளுநர் அவர்களால் இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்க முடியும்.

4. (i) இதன் பின்னர் "ஆலோசனைக் குழு" என அழைக்கப்படும் கீழே குறிப்பிடப்படுகின்ற நபர்களைக் கொண்ட அலுவலர் ஆலோசனைக் குழுவொன்று ஸ்தாபித்தல் வேண்டும். அலுவலக அலுவலர் ஆலோசனைக் குழு.

(ii) (அ) மாகாண சபையின் தவிசாளர் அவர்கள் ஆலோசனைக் குழுவின் அமைப்பு.

(ஆ) மாகாண சபையின் முதலமைச்சர் அவர்கள் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் மாகாண சபையின் வேறொரு உறுப்பினர்

(இ) மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அவரால் பெயரிடப்படும் மாகாண சபை உறுப்பினர் ஒருவர்

(ஈ) முதன்மைச் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவர்

(உ) செயலாளர்

(iii) சபையின் தவிசாளர் மற்றும் சபைச் செயலாளர் முறையே ஆலோசனைக் குழுவின் தலைவரும் செயலாளரும் ஆவர்.

(iv) ஆலோசனைக் குழுக்கூட்டம் ஒன்றின்போது குறைந்தபட்சம் தலைவர் உட்பட மூன்று அங்கத்தவர்கள் சமுகமளித்திருத்தல் வேண்டும். குறைந்தபட்ச பெரும்பான்மை.

5. ஆலோசனைக் குழுவினால், ஆலோசனைக் குழுவின் கடமைகளும் நடவடிக்கைகளும்.

(i) புதிய பதவிகளை இனங்காணுவதற்காக ஆலோசனை வழங்குதலும் சிபாரிசு செய்தலும்

(ii) செயலாளர் அலுவலக அலுவலர்களுக்காக வழங்கவேண்டிய வசதிகளையும் சிறப்புரிமைகளையும் உறுதிசெய்தல்.

(iii) அலுவலக அலுவலர் குழு அங்கத்தவர்களுக்குச் செலுத்தவேண்டிய கொடுப்பனவை உறுதிசெய்யும்போது ஆளுநர் அவர்களுக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

(iv) செயலக அலுவலர் குழுவிற்காக உள்ளக நிபந்தனைகளை உறுதிசெய்தல் ஆகியன நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*செயலாளர் அலுவலகத்தின் அலுவலர்கள்.*

6. செயலாளர் அலுவலகத்தில்,

(i) செயலாளர் அலுவலர் குழு எண்ணிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மூலம் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) செயலாளர் அலுவலர் குழுவானது நாடளாவிய சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களையும், சேவையாளர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) செயலாளர் அலுவலக குழுவிற்காக அனுமதிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, அலுவலர் குழு ஆலோசனைக் குழுவின் சிபாரிசு மீது முதன்மைச் செயலாளருடைய சிபாரிசின் மீது முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அனுமதியுடன் மாற்றம் செய்யப்பட முடியும்.

(iv) இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சபைச் செயலாளர் அலுவலர் குழுவில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை, ஊழியர்களையும் அவரவருடைய எழுத்து மூலமான விருப்பத்துடன் இந்நியதிச் சட்டத்தின்கீழ் சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழு மற்றும் ஊழியர்களாக கருதப்படுவதுடன், தற்பொழுது பதவி வெற்றிடம் நிலவுகின்ற மற்றும் இதனைத் தொடர்ந்து ஏற்படுகின்ற பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக செயலாளர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள சிற்றூழியர்களின் பதவிகளுக்காக செயலாளராலும், ஏனைய பதவிகளுக்காக செயலாளருடைய கோரிக்கையின் மீது அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக முதன்மைச் செயலாளரால் சம்பந்தப்பட்ட நியமன அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(v) செயலாளர் அலுவலகத்தில் அவர்களுடைய சேவைக்காலம், மாகாண அரசாங்க சேவையின் சேவைக்காலமாகக் கருதப்பட வேண்டியதுடன், ஊவா மாகாண சபையில் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கின்ற அனைத்து வசதிகளும் சிறப்புரிமைகளும் கிடைத்தல் வேண்டும்.

(vi) இந்நியதிச் சட்டத்திற்கு இணங்க மேற்குறிப்பிடப்படும் (iv) உப சரத்தின் பிரகாரம் சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவாகக் கருதப்படுகின்ற உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் மாகாண அரசாங்க சேவைக்கு நிகரான அல்லது அதே பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுடைய சிரேஷ்டத்திற்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தல் தகாது. இவ் அலுவலகத்தின் அலுவலர் குழுவில் சேவையாற்றுவதன் காரணமாக வேறொரு பதவி உயர்வு பெறுவதற்கு அல்லது அத்தகைய பரீட்சைகளில் தோற்றுவதற்கு அல்லது தற்பொழுது வகிக்கின்ற பதவிகளில் உயர்வு பெறுவதற்கு மற்றும் அப்பதவிக்கான பரீட்சைளில் தோற்றுவிப்பதற்கு எந்த வகையிலும் தடை ஏற்படுதல் தகாது.

*நிர்வாக நிபந்தனைகள்.*

(vii) செயலகத்தின் அலுவலர் குழு கீழ்க்குறிப்பிடப்படும் நிர்வாக ரீதியிலான நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டியவர் ஆவர்.

(அ) செயலக அலுவலர் குழு தனது உத்தியோகபூர்வ கடமைகளின் இரகசியத்தைப் பாதுகாப்பதற்கும் கடமைகள் தொடர்பாக பொறுப்புடன் நடந்துகொள்வதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

(ஆ) உத்தியோகபூர்வ கடமைகளைப் பக்கச்சார்பின்றி நிறைவேற்றல் வேண்டும்.

(இ) தேவையான சந்தர்ப்பங்களில் மாகாண சபைபொதுக்கூட்டம் நிறைவுபெறும் வரை அலுவலர் குழு தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இணைந்துள்ளது.

(ஈ) மாகாண சபை பொதுக்கூட்டங்களின் கடமைகளை நிறைவேற்றும்போது சபையின் மரியாதைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொருத்தமான உடையை அணிந்திருத்தல் வேண்டும்.

(உ) மாகாண சபை உறுப்பினர்களோடு தொடர்புகொள்ளும்போது பண்பையும் ஒழுக்கத்தையும் பேணுதல் வேண்டும்.

7.1 செயலாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுடைய/ஊழியர்களுடைய பதவிகளில் கீழ்க்காணும் காரணங்களால் வெற்றிடம் ஏற்படுதல் கூடும். அதாவது, *(பதவிக்கான வெற்றிடம் நிலவுதல்.)*

(அ) பதவியிலிருந்து ஓய்வுபெறல்.
(ஆ) இடமாற்றம் பெறுதல்.
(இ) பதவியை இராஜினாமாச் செய்தல்.
(ஈ) ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக பதவி நீக்கப்படுதல்.
(உ) ஏதேனுமொரு நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்பு மீது சிறைத் தண்டனை விதிப்பதினால்,
(ஊ) மரணித்தல்

8. ஆலோசனைக் குழுவின் சிபாரிசின் மீது மிகத் தரமான நிர்வாகம் ஒன்றுக்குத் தேவையான புதிய பதவிகளை இனங்காணல் மற்றும் அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுதல் ஆகியன செயலாளர் அவர்களின் கடமையாகும். *(புதிய பதவிகளை ஏற்படுத்தல்.)*

9.(i) (அ) மாகாண அரசாங்க சேவையில் ஏதேனும் பதவி வகிக்கின்ற ஒருவர் செயலாளர் அலுவலர் குழுவிற்கு இடமாற்றம் செய்யப்படுவாராயின், அக்கடமைக்காக செயலாளர் அவர்களுடைய எழுத்துமூலமான பூர்வாங்க விருப்பத்தைப் பெறுதல் வேண்டும். *(இடமாற்றங்கள்.)*

(ஆ) செயலாளர் அவர்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கை மீது செயலாளர் அலுவலர் குழுவிற்கான நியமனம் செய்யப்பட்ட அல்லது இடமாற்றம் செய்யப்பட்ட எவரேனும் ஒருவர் செயலாளருடைய பூர்வாங்க எழுத்துமூல அனுமதியின்றி செயலாளர் அலுவலர் குழுவிலிருந்து இடமாற்றம் செய்யப்படுதல் கூடாது.

(ii) எனினும் அவ்வாறானதொரு உத்தியோகத்தரை அத்தியாவசிய சேவையைக் கருதி விடுவிக்கப்படுதலானது கீழ்க்காணப்படும் காரணங்களால் தவிர பொதுவாக செயலாளரினால் நிராகரிக்கப்படுதலாகாது.
அதாவது,

(அ) செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவில் அவருடைய சேவை ஒப்பந்தமொன்றுக்கு உட்படுத்தப்பட்டபோது அல்லது,

(ஆ) அவருடைய சேவை ஒப்பந்தத்திற்கு உட்படாவிடினும், செயலாளர் அலுவலகத்தில் சேவைக்காக செயலாளர் அலுவலகத்தினால் விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்டிருப்பாராயின் அல்லது,

(இ) அவ்வாறானதொரு உத்தியோகத்தரை விடுவிப்பதாவது செயலாளர் அலுவலகத்தில் கடமைகளை நிறைவேற்றுவதில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடுமென செயலாளர் அவர்களால் கருதப்படும்போது,

(ஈ) ஏதேனும் நிர்வாக ரீதியிலான கடமைகள் மீது செயலாளரால் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்றுவது தகுந்ததாகும் என சிபாரிசு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் முதன்மைச் செயலாளர் அவர்கள் மூலமாக இடமாற்றத்திற்கு உட்படுவர்.

(உ) இடமாற்றம் தேவைப்படும் உத்தியோகத்தர்கள் அல்லது ஊழியர்கள் தனது விருப்பத்தின் பிரகாரம் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஊ) வருடாந்த இடமாற்றக் கொள்கை மீது விதிக்கப்படுகின்ற இடமாற்று நிபந்தனைகள் செயலக உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் இடமாற்றத்திற்கு கட்டாயப்படுத்தலாகாது.

(எ) செயலகத்திற்காக மாத்திரம் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கென ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றம் அல்லது சுயவிருப்பத்துடனான இடமாற்றங்களுக்கு உட்படமாட்டார்கள்.

அலுவலகக் குழுவின் ஊதியமும் கொடுப்பனவும்.

10. (i) அலுவலக அலுவலர் குழுவிற்குச் செலுத்தவேண்டிய ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை சபை நிதியத்திலிருந்து செலுத்துதல் வேண்டும்.

(ii) செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவிற்காக நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் அவர்கள் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவில் சேவையாற்றும் வரை அலுவலர் குழு ஆலோசனைக் குழு சிபாரிசின் மீது, ஆளுநர் அவர்களுடைய அனுமதியுடன், ஊவா மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் செலுத்தப்படுகின்ற ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தின் குறிப்பிட்டதொரு சதவீத கொடுப்பனவு செலுத்தப்பட இயலும்.

ஒழுக்காற்று நடவடிக்கைகள்.

11. சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவின் அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள், மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களைக் கொண்டு அமைந்திருக்க வேண்டியதுடன், ஒழுக்காற்று அதிகாரி முறையே அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் அதிகாரம் வழங்கப்படும் ஒருவராவார்.

அலுவலர் குழுவினர் ஓய்வுபெறல்.

12. செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் ஐம்பத்தைந்து (55 வயது) வயது பூர்த்தியான பின்பு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அல்லது அறுபது (60 வயது) பூர்த்தியாவதன் காரணமாகவும் ஓய்வுபெறுவதற்கான இணக்கத்தைத் தெரிவிக்க முடியும். ஓய்வுபெறுவதற்கு எதிர்பார்க்கின்ற திகதிக்கு ஆறு (06) மாதங்களுக்கு முன்னதாக செயலாளர் அவர்களிடம் அறிவிப்பதன் மூலமாக இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

நிதி.

13. வருடாந்த நிதிப் பிரகடனத்திற்கு இணங்க செயலாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு செயலாளர் அலுவலகம் தொடர்பான செலவு மதிப்பீடு ஒன்று செயலாளர் அவர்களினால் தயாரிக்கப்பட்டு முதன்மைச் செயலாளர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கணக்காய்வு நடவடிக்கைகள்.

14. 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் சட்டமூலத்தின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

பொது ஏற்பாடுகளும் கட்டளைகளும்.

15. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்கும் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், ஊவா மாகாண ஒழுக்காற்றுச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், ஊவா மாகாண நிதிக் கட்டளைக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், ஆளுநர் அவர்கள், முதன்மைச் செயலாளர் மற்றும்ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தற்பொழுது விதிக்கப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் செயலாளர் அலுவலர் குழுவிற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

விளக்கமளித்தல்.

16. மொழி தொடர்பாக வேறு வகையில் விளக்கமளித்தல் தேவைப்பட்டால் தவிர இந்நியதிச் சட்டத்தின்,

"மாகாண சபை" என்பது, ஊவா மாகாணத்தின் மாகாண சபையையும்,

"ஆளுநர்" என்பது, ஊவா மாகாண ஆளுநர் அவர்களையும்,

"முதலமைச்சர்" என்பது, ஊவா மாகாண முதலமைச்சர் அவர்களையும்,

"தவிசாளர்" என்பது ஊவா மாகாண சபையின் தவிசாளர் அவர்களையும்,

"முதன்மைச் செயலாளர்" என்பது, ஊவா மாகாணத்தின் முதன்மைச் செயலாளர் அவர்களையும்,

"செயலாளர்" என்பது, ஊவா மாகாண சபையின் செயலாளர் அவர்களையும்,

"ஆலோசனைக் குழு" என்பது, அலுவலகத்தின் அலுவலர் ஆலோசனைக் குழுவையும்.

"செயலகம்" என்பது, ஊவா மாகாண சபைச் செயலாளர் அலுவலகத்தையும்,

"செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழு" என்பது, ஊவா மாகாண சபைச் செயலாளர் அலுவலகத்தின் அலுவலர் குழுவையும் குறிக்கப்படுகின்றது.

17. இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியில் இருந்து 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய மாகாண சபைச் செயலாளர் அலுவலகக் குழுவின் நியதிச்சட்டம் இரத்துச்செய்யப்படுவதோடு, இதுவரை காலமும் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய நியதிச்சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படாததுடன், அவை இந்நியதிச் சட்டத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி சொல் மேலோங்கி நிற்றல்.

18. இந்நியதிச் சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி சொற்களுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி சொல் மேலோங்கி நிற்கும்.

8-1084

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.